# காமராசர் விழா

கல்விக்கண் தந்த கர்மவீரர் காமராசரின் பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாளாக ஜூலை 15-ஆம் தேதி அன்று பள்ளி கொண்டாடி மகிழ்ந்தது. சிறப்பு விருந்தினராகப் பேராசிரியர் முனைவர் திரு ஆர் தாமோதரன் (வேதியியல் துறை, இ.தொ.நு.க, சென்னை) தலைமைத் தாங்கிக் குத்துவிளக்கேற்றி விழாவினைத் தொடங்கி வைத்தார்.

பள்ளி மாணவர்கள் இறைவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புரை, தமிழில் பேச்சு, ஆங்கிலத்தில் பேச்சு, நேர்காணல், கருத்துப்படம், நடனம், உரைவீச்சு, தனிநடிப்பு, கவிதை என்று பல்வேறு நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டினர்.

சிறப்பு விருந்தினரின் உரையுடன் விழா இனிதே நடைபெற்றது. பள்ளி மாணவி நன்றியுரை கூறியதுடன் நாட்டுப்பண் பாடி விழாவினை நிறைவு செய்தோம்.

--------------------------------------------------------------------------------